காலைதகவல்
சென்னை

ஜிப்மர் 14வது பட்டமளிப்பு விழாவில் மக்கள் நம்பிக்கை எதிர்பார்பை பூர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு மாணவர்களுக்கு உள்ளது

மத்திய அமைச்சர் அனுப்பிரியா படேல் பேச்சு

புதுச்சேரி, ஜன.22

புதுச்சேரியில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஜவஹர்லால் முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஜிப்மர்), 14 வது பட்டமளிப்பு விழா ஜிப்மர் வளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரங்கில் நடைபெற்றது. இதில் ஜிப்மர் இயக்குநர் முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்களை வரவேற்று சிறப்புசெய்து நிறுவனத்தின் வளர்ச்சி, சாதனைகள் மற்றும் எதிர்கால திட்டங்களை விளக்கி பேசியதுடன் நிறுவன அறிக்கையை வாசித்தார்.

தொடர்ந்த பட்டமளிப்பு விழாவில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை இணையமைச்சர் அனுப்பிரியா படேல், கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பட்டங்கள், விருதுகள் மற்றும் பதக்கங்களை வழங்கி பேசியதாவது :

இது கல்விசார் விழாவல்ல, பொறுப்பு, சேவை, நெறிமுறை, மருத்துவ நடைமுறை ஆகிய நோக்கத்துடன் வாழ்க்கையின் தொடக்கம் என்றார்.

மருத்துவம் ஒரு தொழில் அல்ல, உன்னார்ந்த அழைப்பு என்றும், அதை அறிவியல் திறன், கருணை, அன்பு, மனிதநேயம் ஆகியவற்றை இணைத்து செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், சுகாதார சேவை தேசிய கொள்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், மக்களுக்குத் தேவையான, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பாக முன்னிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத், மலிவுவிலை மருந்துகள் திட்டம், தேசிய டயாலிசிஸ் திட்டம் போன்ற முன்னணி திட்டங்கள், ஒருங்கிணைந்த சுகாதார திட்டம் ஆகியவற்றை விளக்கி கூறிய மத்திய இணையமைச்சர் ஒரே நாடு ஒரே சுகாதாரம் என்ற தற்போதைய புதிய கொள்கை பற்றியும் எடுத்துரைத்தார். வேகமாக வளர்ந்து வரும் நவீன மருத்துவக் கல்வி கட்டமைப்பு பற்றி குறிப்பிட்ட அவர் அனைத்துத் தரப்பு மாணவர்களும் மருத்துவராக வேண்டும் என்ற கனவை, நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள எய்ம்ஸ் போன்ற நிறுவனங்கள் உறுதிசெய்துள்ளன என்றார். ஜிப்மரின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு தொடர்ந்து வழங்கும் என்று அமைச்சர் அனுப்பிரியா படேல் உறுதியளித்தார்.

தங்களின் தனிப்பட்ட கனவுகளைத் தாண்டி கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு மருத்துவர்களுக்கு உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி பேசுகையில் மருத்துவக் கல்வி, நோயாளி பராமரிப்பு, ஆராய்ச்சி, கட்டமைப்பு வளர்ச்சி, சமூகப் பங்களிப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் ஜிப்மர் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எடுத்துரைத்தார். புதுச்சேரி சேதராப்பட்டில், விபத்து மற்றும் புணர்வாழ்வு மையம், பல்லுறுப்பு மாற்று அறுவைசிகிச்சை மையம் போன்ற முக்கிய திட்டங்கள் தொடங்கப்பட இருப்பதாகவும், இவை தென் இந்தியா முழுவதும் உள்ள ஏழை மக்களுக்கு உயர்தர சிகிச்சை வழங்கும் வகையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்த விழாவில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கே. கைலாஷ்நாதன், புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் ஆர். செல்வம், எம்.பி. என். மஞ்சுநாத், எம். எல்.ஏ. வி. ஆறுமுகம், ஜிப்மர் தலைவர் டாக்டர் சித்ரா சர்கார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மொத்தம் 941 மாணவர்கள் பட்டம் பெற்றனர். கல்வியில் சிறந்து விளங்கிய 180 மாணவர்கள் பதக்கங்கள் மற்றும் நிதி விருதுகள் பெற்றனர்.

பட்டமளிப்பு விழாவை ஜிப்மரின் கல்லூரி முதல்வர் டாக்டர் விக்ரம் காட்டே ஒருங்கிணைத்து நடத்தி விழா நிறைவில் நன்றி கூறினார்.

முன்னதாக தாயின் பெயரில் ஒரு மரக்கன்று என்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சியின் கீழ் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.